# TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION

No. 19A, Rukmini Lakshmipathy Road, (TIDCO Complex),

Egmore, Chennai 600 008

Phone: ++91-44-28411376 / 28411378 / 28411379 Fax: ++91-44-2841137

email: tnerc@nic.in Website: www.tnerc.gov.in

## செய்தி வெளியிடு

எண் : 02/2013
நாள்: 15 –03–2013

ஆணையம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் (முன்னர் தமிழ்நாடு மின்வாரியம் என்று அழைக்கப்படும்) மின்வட்ட அலுவலகம் ஒவ்வொன்றிலும் மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் (மி.நு.கு.ம) இருந்து வருவதை மின்நுகர்வோர் கவனத்திற்கு கொண்டுவருவதற்காக 2012 ஜுலை மற்றும் 2013 ஜனவரி ஆகிய மாதங்களில் செய்திக்குறிப்பு வெளியிட்டது. வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பின் விவரங்கள் மின்நுகர்வேரின் தகவலுக்காக மீண்டும் ஒருமுறை வெளியிடப்படுகிறது.

மின்வட்டம் / மாவட்டம் ஒவ்வொன்றிலும் மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் என்ற தனிப்பட்ட அமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மின்நுகர்வோர் தம்முடைய புதிய மின்னிணைப்பிற்கான விண்ணப்பம், மின்னிணைப்பு வழங்குவதில் ஏற்படும் காலத்தாழ்வு, குறைபாடுடைய மின்னளவிகளை மாற்றுதல், மின்நுகர்வு பட்டியல் தொடர்பான பூசல், குறைபாடுகளை உடனடியாக தீர்க்காதிருத்தல் அல்லது தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் வழங்கப்பட்ட மின்னிணைப்புகள் தொடர்பான ஏதேனும்பிற குறைகளைப் பொறுத்து சம்பந்தப்பட்ட மின்வட்டத்தின் மேற்பார்வைபொறியாளரைத் தலைவராகக்கொண்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தினை அணுகலாம். மின்வட்டத்திலுள்ள மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் ஒவ்வொன்றும் ஒரு தலைவரையும், இரண்டு உறுப்பினர்களையும் கொண்டதாகும். மின்வட்டத்தின் மேற்பார்வை பொறியாளர் குறைதீர்மன்றத்தின் தலைவர் ஆவார் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் மின்வாரியத்திற்கு வெளியிலிருந்து மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படுவர். இந்த உறுப்பினர்கள், மின்நுகர்வோர்

நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபாடு கொண்டிருப்பதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இந்த மன்றம், மனுவைப் பெற்றதிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஒப்புகை அளித்தல் வேண்டும். இந்த மன்றம் மனுவின் மீது இரண்டு மாதங்களுக்குள் ஆணை பிறப்பித்தல் வேண்டும். முறையீட்டாளர் மன்றத்தின் முடிவில் திருப்தியடையவில்லை என்றால், அவர் மின்நுகர்வோர் குறைதீர் மன்ற ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் அலுவலகத்தில் அமைந்துள்ள மின்குறைத்தீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்யலாம். (ஒன்றுக்கு மேற்பட்ட மன்றத்திற்குப் பொருந்தக்கூடியதாகக் கருதப்படலாகும்) பொதுத்தன்மையதான முறையீடுகள் மாநில அளவிலான மின்நுகர்வோர் சங்கத்தினால் நேரடியாக மின்குறைதீர்ப்பாளரிடம் தாக்கல் செய்யப்படலாம்.

எனவே, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் குறித்து முறையீடுகள் / புகார்கள் செய்ய விரும்புபவர்கள் இந்த முறையைப் பயன்படுத்தி குறைதீர்மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் ஆகிய இரண்டு அமைப்புகள் மூலம் தங்களுடைய குறைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.

**(சி. குணசேகரன்)**
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்